R4851

# “THE LORD IS MY SHEPHERD”
# “கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்”

தீர்க்கதரிசி தாவீது தன்னைக் குறித்தே 23ஆம் சங்கீதத்தை எழுதினார். ஆனால் அவரது வார்த்தைகளில் இன்னும் ஆழமான பொருள் இருக்கிறது. அதாவது யேகோவா மெய்யான தாவீதாகிய கிறிஸ்துவுக்கு (The Christ) மேய்ப்பராயிருக்கிறார். கிறிஸ்து என்பது தலையாகிய இயேசுவும் சரீரமாகிய சபையும் சேர்ந்ததாகும்.

கர்த்தருக்கு இணக்கமான மனோபாவத்தை உடையவர்களாக இருக்கிறவர்கள் தற்கால சூழ்நிலைக்கு இணக்கமில்லாதிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தரின் “ஆடாக” அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு சாதகமற்ற சூழ்நிலைகளில் மகா சத்துருவானவன் அவர்களை அழிக்க விரும்புகிறான். நரிகள், ஓநாய்கள், சிங்கங்கள் மற்றும் கால்நடைகள் கூட எதிர்க்கவும் தன்னைக் காத்துக்கொள்ளவும் செய்யும். ஆனால் ஆடுகளுக்கு யாருமே இல்லை. ஆகையால் ஆடுகள் மேய்ப்பனை நம்பியே இருக்கின்றன. வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், அவை மேய்ப்பனை விட்டு விலகியிருந்தால் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கின்றன. தேவன் மனிதனுக்கு பாதுகாப்பை அருளியிருந்தார். ஆனால் பாவத்தினால் வனாந்தர நிலைமைக்குச் சென்றான்; பல்வேறு துன்பங்களுக்கு ஆளானான். இல்லையென்றால் இப்படிப்பட்ட நிலைமை மனிதனுக்கு இருந்திருக்காது.

“ஆடாக” இருப்பவர்கள் கர்த்தருடன் இணக்கத்திற்கு திரும்பி வருவார்கள். நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல சபை வகுப்பார் இந்த காலத்தில் திரும்பி வருவார்கள். காலம் செல்லச்செல்ல, தெய்வீக கவனிப்பு எப்படி தேவைப்படுகிறது என்பதை நாம் அனைவரும் உணருகிறோம். தெய்வீக திட்டத்தின்படி இந்த மந்தையில் உள்ள அனைவரும், தேவனுடன் இணக்கத்திற்கு வரும் அனைவரும் இந்த கவனிப்பை பெறுவார்கள். கடைசியாக ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமே இருக்கும்.

நமது கர்த்தராகிய இயேசு பிதாவானவரின் பிரதிநிதியாக இருக்கிறார். கர்த்தரின் ஆடுகளாகிய மனுக்குலம் வழி தவறி சென்று விட்டது. ஆதாமின் சந்ததியினர் அனைவரும் இப்பொழுது காணாமல் போய்விட்டனர். மகா மேய்ப்பர் காணாமற்போன ஆடுகளைத் தேடி தமது குமாரனை அனுப்பினார். அவர் அவைகளை தேடிக் கொண்டிருக்கிறார். கடைசியில் இந்த உண்மையான மந்தையை கண்டுபிடிப்பார். ஆகையால் அவர் மெய்யான பொருளில் கண்காணியாக, நமது ஆத்துமாக்களின் மேய்ப்பனாக இருக்கிறார். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்.